**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 64/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.02.2026 | | |
| பெயர்: | ஜெயந்தி<br>(PW– 2 Cross ) | கணவர் பெயர்: | பாஸ்கர் |
| கிராமம்: | மேலகாவேரி | தாலுக்கா: | கும்பகோணம் |
| தொழில்: | டெக்ஸ்டைல்ஸ் | வயது : | 51/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.27)**

1. நான் இந்த வழக்கின் 1ம் வாதி. 2ம் வாதி எனது சகோதரி ஆவார். வழக்கு சொத்தின் சர்வே எண். 343/6 என்றால் சரிதான். அதன் மொத்த திட்ட பரப்பு எவ்வளவு என்றால் அதுபற்றி எனக்கு நினைவில் இல்லை. தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் இந்திரேசன், நவநீதம்மாள், கண்ணையன் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. பட்டாவை தவிர தாவா சொத்துக்களுக்கு பதிவுபெற்ற ஆவணங்கள் ஏதும் கிடையாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தில் தெற்கு பார்த்த ஓட்டு வீடு இருந்தது என்றால் சரிதான், தெருவானது கிழக்கு–மேற்காக இருக்கும். தாவா சொத்தில் கிழமேல், தென்வடல் அளவுகள் எவ்வளவு என்று பிராதில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆனால் எவ்வளவு அளவுகள் என்று ஞாபகமில்லை. நான் பிராதில் மொத்த அளவு தான் குறிப்பிட்டுள்ளேன், நீள–அகல அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3. 996 சதுரடியில் 2/6 பாகம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மொத்த சொத்து என்பது 370 ச.மீ என்றால் சரிதான். அதில் 92.5 ச.மீ–ல் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 92.5 ச.மீ என்பது மொத்த சொத்தில் எந்த பகுதி என்று கூறாமலும், பிரிக்கப்படாமலும் நான் பிராதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இந்திரேசனின் பாகம் தான் எங்களுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

4. இந்திரேசனுக்கு தாவா சொத்தில் எந்த பகுதி என பிரிக்கப்படாமல் உள்ள நிலையில் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 92.5 ச.மீ தாவா சொத்தில் எந்த இடத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஏதுவாக வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் மொத்த சொத்தினுடைய நீள–அகலம் மற்றும் பரப்பு, வழக்கு சொத்தின் நீள–அகலம் மற்றும் பரப்பினை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நீள–அகலம் மற்றும் பரப்பு எதையும் வரைபடத்தில் கூறாமல் நான் வழக்கிற்காக கூறியுள்ளேன் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நவநீதத்தம்மாளின் மகள்கள் தான் பேபி, கமலா, ருக்மணி, சுலோச்சனா என்றால் சரிதான். ருக்மணி, சுலோச்சனா ஆகிய இருவரும் இறந்துவிட்டனர். அவர்களது வாரிசுகள் இருக்கிறார்கள். ருக்மணிக்கு 2 மகன்கள், ஆனால் பெயர் ஞாபகமில்லை. சுலோச்சனாவிற்கு 2 மகள்கள் உண்டு, ஆனால் மகன் ஒன்றா அல்லது இரண்டா என ஞாபகமில்லை. 5ம் பிரதிவாதிக்கு வினோபா, ராதிகா என்ற 2 மகள்கள், தினேஷ்பாபு என்ற மகன் உண்டு.

6. இந்த வழக்கில் இறந்துபோன ருக்மணி, சுலோச்சனா ஆகியோரின் வாரிசுகளும், 5ம் பிரதிவாதியின் வாரிசுகளும் அவசியத்தரப்பினர் என்பதால் அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 5,7 பிரதிவாதிகளான கமலா, தினேஷ் வசிக்கும் இடங்களை

தவிர மற்ற இடங்கள் காலியாக தான் இருக்கிறது என்றால் சரிதான். அதனால் சந்து பகுதி என்பது தற்போது இல்லை என்றால் சரிதான். ஆனால் வழக்கு போடுவதற்கு முன்பு சந்து இருந்தது.

7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சுமார் 5 வருட காலத்திற்குள் சந்து என்பது இல்லை என்றால் சரியல்ல. மொத்த சொத்துக்களுமே பாகப்பிரிவினை ஏற்படாமல் இருக்கும்போது, அதில் 4ல் ஒரு பகுதியை வழக்கு சொத்தாக காண்பித்து வழக்கு தொடர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு எந்தவிதத்திலும் செல்லத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.51)**